

# பாகிஸ்தானில் உயர் கல்விவாய்ப்பு

## பாகிஸ்தான் – இலங்கை உயர் கல்வி ஒத்துழைப்பு திட்டம்

# அல்லாமா இக்பால்

## இலங்கை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம்

அல்லாமா மொஹம்மட் இக்பால் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் பாகிஸ்தான் உயர்கல்வி ஆணைக்குழுவானது இலங்கை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தினை அறிவித்துள்ளது. மருத்துவம், பொறியியல், விவசாயம், முகாமைத்துவம், கணனி விஞ்ஞானம் மற்றும் ஏனைய பலதுறைகளில்தேர்வுசெய்யப்பட்ட 1000 மாணவர்களுக்கு அவ்வவ்துறைகளில் அவர்களது ஆளுமையை விருத்தி செய்யும் முகமாக இப்புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது.

இலங்கை மற்றும் பாகிஸ்தானிய மாணவர்களுக்கிடையில் அறிவுப் பரிமாற்றம், கலாசாரங்கள் மற்றும் மரபுகள் பற்றிய சிறந்த புரிதலை மேம்படுத்துவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் உயர்தரவரிசையில் உள்ள பாகிஸ்தான் பல்கலைக்கழகங்களில் கல்வியினை தொடர்வார்கள். இலங்கை மாணவர்கள் பாகிஸ்தானிய சமூகம் மற்றும் அதன் மதிப்புகள் பற்றி அறிந்து கொள்வதோடு தலைமைத்துவ திறன்களையும் பெற்றுக்கொள்வார்கள். மேலும்,பாகிஸ்தானிய மாணவர்கள் மற்றும் சமூகக் குழுக்களுக்கு இலங்கை மற்றும் அதன் கலாசாரத்தைப் பற்றி அறிந்துகொள்ளவும் இத்திட்டம் உதவுகின்றது. முழுக் கல்விக் கட்டணம், பராமரிப்புக் கொடுப்பனவு, விடுதிக் கட்டணம், புத்தகம் கொடுப்பனவுகள் மற்றும் ஒரு தடவைக்கான பிரயாணக் கட்டணம் என்பன இந்த புலமைப் பரிசிலில் அடங்குகின்றது. இந்தப் புலமைப் பரிசிலுக்கு பெண்கள் அதிகமாக விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

### படிப்புகள்/ துறைகள்

இந்த புலமைப்பரிசிலானது BS, MS மற்றும் Ph.D என அனைத்து துறைகளுக்கும் வழங்கப்படுகின்றது. பொறியியல், அடிப்படை மற்றும் இயற்கை விஞ்ஞானம்,சமூக விஞ்ஞானம், கட்டிடக்கலை, நுண்கலை, வணிகக் கல்வி, கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் விவசாய விஞ்ஞானம் ஊடகம் & தொலைத்தொடர்பு கற்கைகள், மொழித்துறை கற்கைகள் துறைகளும் இதில் அடங்கும். பாகிஸ்தான் பிரதமரின் அறிவுறுத்தலின் படி MBBS (மருத்துவத்துறை) படிப்பிற்காக குறிப்பாக 100 புலமைப்பரிசில்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**முழு நிதியுதவி புலமைப்பரிசு:**
இது கல்விக் கட்டணம், பராமரிப்பு கொடுப்பனவுகள், விடுதிக் கட்டணங்கள் மற்றும் புத்தகக் கட்டணம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

| பட்டப்படிப்பு திட்டம் | பாடம் | வெற்றிடம் |
|---|---|---|
| விஞ்ஞானமாணி (B.Sc) (4 வருடங்கள்) | பொது | 150 |
| | பொறியியல் | 50 |
| | மருத்துவம் | 40 |
| MS/MPhil (2-ஆண்டுகள்) | அனைத்து பாடங்களும் | 50 |
| PhD (கலாநிதி) | அனைத்து பாடங்களும் | 10 |
| | **மொத்தம்** | **300** |

**பகுதி நிதியுதவி புலமைப்பரிசு:**
இது கல்விக் கட்டணத்தை மட்டும் உள்ளடக்கியது. கல்விக் கட்டணத்தைத் தவிர்ந்த ஏனைய கூடுதல் செலவுகள் இலங்கை மாணவர்களால் மேற்கொள்ளப்படும்

| பட்டப்படிப்பு திட்டம் | பாடம் | வெற்றிடம் |
|---|---|---|
| விஞ்ஞானமாணி (B.Sc) (4 ஆண்டுகள்) | பொது | 40 |
| | பொறியியல் | 20 |
| | மருத்துவம் | 10 |
| MS/MPhil (2-ஆண்டுகள்) | அனைத்து பாடங்களும் | 20 |
| PhD (கலாநிதி) | அனைத்து பாடங்களும் | 10 |
| | **மொத்தம்** | **100** |

### தேவையான தகைமைகள் மற்றும் தகுதிகள்

| | |
|---|---|
| **மருத்துவத்துறை, பல் மருத்துவம் மற்றும் மருந்தியல்** | ஜீ.சீ.ஈ உயர்தரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சை (முன் மருத்துவம்) குறைந்தபட்சம் 65% மதிப்பெண்களுடன். |
| **பொறியியல்** | ஜீ.சீ.ஈ உயர்தரம் / அல்லது அதற்குச் சமமான பரீட்சை (முன் பொறியியல்) குறைந்தபட்சம் 65% மதிப்பெண்களுடன். |
| **இளங்கலை பட்டப்படிப்புத் திட்டம்** | ஜீ.சீ.ஈ உயர்தரம் / அல்லது அதற்குச் சமமான பரீட்சை தேவையான பாடங்களில் குறைந்தபட்சம் 60% மதிப்பெண்களுடன். |
| **முதுகலை பட்டப்படிப்பு திட்டம்** | பட்டதாரி அளவில் 60% மதிப்பெண்களுடன், தொடர்புடைய பாடத்தில் 16 ஆண்டுகள் கல்வி |
| **கலாநிதி பட்டப்படிப்பு திட்டம்** | முதுநிலை மட்டத்தில் CGPA 3.00/4.00 உடன், தொடர்புடைய பாடத்தில் 18 ஆண்டுகள் கல்வி. முதுநிலை மட்டத்தில் ஒரு ஆராய்ச்சி ஆய்வறிக்கை |

**முக்கிய குறிப்பு:**
- புலமைப் பரிசில்கள் தகுதியின் அடிப்படையில் வழங்கப்படும்.
- இணைவதற்கான இறுதித் திகதியில்,இளங்கலைப் பட்டதாரிகளுக்கான வயது எல்லை 23 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் மற்றும் முதுகலை பட்டப் படிப்புக்கு ஆசிரியர் அல்லாத விண்ணப்பதாரிகளுக்கு 35 வயதுக்கும், ஆசிரிய விண்ணப்பதாரிகளுக்கு 40 வயதுக்கும் மேற்படாமல் இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்களுக்கு தகுதித் தேர்வு மதிப்பெண் மற்றும் கல்விச் சான்று மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்.
- உயர் கல்வி கற்பிக்கப்படும் மொழி ஆங்கிலமாகும்.
- பாகிஸ்தானில் கல்வியை முடித்த பின்னர் இலங்கையில் சேவை செய்ய வேண்டும்
- ஏற்கனவே வேறு ஏதேனும் பாகிஸ்தானின் உயர் கல்வி ஆணைய உதவித் தொகையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்.
- விண்ணப்பதாரர் வழங்கிய தகவலின் அடிப்படையில் தகுதிப் பட்டியல் தயாரிக்கப்படும்.
- பகுதியளவு நிதியுதவி பெற்றால் கல்விக் கட்டணம் மட்டுமே பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்படும் மீதமுள்ள செலவினத்தை விண்ணப்பதாரர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**
- விண்ணப்பதாரர்கள் பாகிஸ்தான் உயர் கல்வி ஆணைய இணையதளமான http://eportal.hec.gov.pk/paksl மூலம் தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.
- இது பற்றிய மேலதிக விபரங்களை http://hec.gov.pk/site/pksl இல் பெற்றுக் கொள்ளலாம்.
- அனைத்து விண்ணப்பதாரிகளும் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் பாகிஸ்தான் உயர் கல்வி ஆணையம் நடத்தும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.
- தவறான, பிழையாக தகவல்களை வழங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பின் புலமைப் பரிசிலை எந்தநேரத்திலும் நிறுத்தும் உரிமை பாகிஸ்தான் உயர் கல்வி ஆணையத்திற்கு உண்டு.

**இணையதளத்தில் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் திகதி ஏப்ரல் 30, 2022 ஆகும்.**
விண்ணப்பம் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**ஜெஹான்செப் கான்**
**திட்டப் பணிப்பாளர் (பாக்-இலங்கைத் திட்டம்)**
**உயர் கல்வி ஆணையம்,**
**எச்-8. இஸ்லாமாபாத்.**
**பாகிஸ்தான்.**
**info.paksl@hec.gov.pk**

WWW.UPLANKAJOBS.COM